

சென்னை – தலைமைச் செயலகத்தின் அலுவலக உதவியாளர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் சங்கத்தின் செயலாளர் ஆர்.மோகன் தலைமையில் சங்க நிர்வாகிகள், சொந்த வீட்டுமனை கோரிக்கை தொடர்பாக, வருவாய்த்துறை மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரனை, தலைமைச் செயலகத்தில் நேரில் சந்தித்து மனு வழங்கினார்.

# தமிழகத்தில் உள்ள பல்கலைக் கழகங்களில் ஒரே மாதிரியான பாடத்திட்டம்!

## உயர்கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி பேட்டி!

சென்னை, ஜூலை 22-

தமிழகத்தில் உள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் ஒரே மாதிரியான பாடத்திட்டம் கொண்டுவரப்படும் என்று தமிழக உயர்கல்வித் துறை அமைச்சர் க. பொன்முடி தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று அமைச்சர் பொன்முடி தலைமையில் நடைபெற்ற பல்கலைக்கழக துணை வேந்தர்கள் ஆலோசனைக் கூட்டத்துக்குப்பின் செய்தியாளர்



களை சந்தித்தார்.

செய்தியாளர் சந்திப்பின் போது அமைச்சர் பொன்முடி கூறியதாவது:-

உயர்கல்வி துறையின் கீழ் இயங்கும் பல்கலைக்கழங்கள் மற்றும் கல்லூரிகளின் தரத்தை உலகளவில் உயர்த்த வேண்டும்.

தமிழகத்தில் உள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் ஒரே மாதிரியான பாடத்திட்டம் கொண்டு வரப்படும். இதனால், கல்லூரிகளிலிருந்து வேறு கல்லூரிக்கு மாறும் மாணவர்கள் மற்றும் பேராசிரியர்களுக்கு உதவியாகஇருக்கும்.

காலியாக உள்ள பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள், தேர்வுக் கட்டுப்பாட்டாளர்கள் பணியிடங்கள் நிரப்பப்படும். கல்லூரிகளில் காலியாக இருக்கும் 4,000 உதவிப் பேராசிரியர்கள் பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்படும் என்றும் தெரிவித்தார்.

கௌரவ விரிவுரையாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் ரூ.20 ஆயிரம், இனி ரூ.25 ஆயிரமாக உயர்த்தப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

### மணிப்பூரில் பழங்குடியினப் பெண்கள் மானபங்கம்:

# ஒன்றிய அரசு பொறுப்பேற்றே தீர வேண்டும்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கம்!

சென்னை, ஜூலை 22-

மணிப்பூரில் பழங்குடி இன பெண்கள் மானபங்கம் செய்யப்பட்டதற்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு பொறுப்பேற்றே தீர வேண்டும் என்று ‘தினகரன்’ நாளேடு தலையங்கம் எழுதியுள்ளது.



தினகரன்

ஜூலை 21, 2023 வெள்ளிக்கிழமை

கொடூரத்தின் உச்சம்

மணிப்பூர் மாநிலத்தில் மெய்டீஸ், குக்கி இரு சமூகத்தினர் இடையே மோதல் வெடித்து அது கலவரமாக மாறியது. இதனால் அம்மாநிலத்தில் வன்முறை கட்டவிழ்க்கப்பட்டு தலைவிரித்தாடி வருகிறது. ஒன்றிய அரசு ராணுவத்தை பாதுகாப்புக்கு அனுப்பியும் அமைதிக்குழுவை ஏற்படுத்தியும் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அம்மாநிலத்தில் முகாமிட்டு பேச்சுவார்த்தை நடத்திய பிறகும் கலவரங்கள் குறைந்ததாக தெரியவில்லை. மணிப்பூர் பற்றி எரியும் போது அதுகுறித்து ஒரு வார்த்தைகூட பேசாமல் பிரதமர் மோடி கர்நாடக மாநில தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டதற்கு காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல்காந்தி உள்பட பல்வேறு கட்சி தலைவர்கள் கண்டனம் தெரிவித்தனர்.

அது வருமாறு:-

மணிப்பூர் மாநிலத்தில் மெய்டீஸ், குக்கி இரு சமூகத்தினர் இடையே மோதல் வெடித்து அது கலவரமாக மாறியது. இதனால் அம்மாநிலத்தில் வன்முறை கட்டவிழ்க்கப்பட்டு தலைவிரித்தாடி வருகிறது. ஒன்றிய அரசு ராணுவத்தை பாதுகாப்புக்கு அனுப்பியும் அமைதிக்குழுவை ஏற்படுத்தியும் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அம்மாநிலத்தில் முகாமிட்டு பேச்சுவார்த்தை நடத்திய பிறகும் கலவரங்கள் குறைந்ததாக தெரியவில்லை. மணிப்பூர் பற்றி எரியும் போது அதுகுறித்து ஒரு வார்த்தைகூட பேசாமல் பிரதமர் மோடி கர்நாடக மாநில தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டதற்கு காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல்காந்தி உள்பட பல்வேறு கட்சி தலைவர்கள் கண்டனம் தெரிவித்தனர்.

இந்நிலையில் தான் பழங்குடியின பெண்கள் இருவரை மெய்டீஸ் சமூகத்தினர் நிர்வாணப்படுத்தி சாலையில் ஊர்வலமாக அழைத்து செல்வது போன்று சமூகவலைதளங்களில் வீடியோ வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மணிப்பூர் மாநிலத்தில் நடந்த கொடூரத்தின் உச்சமாக கருதப்படும் இச்சம்பவம் கடந்த மே மாதம் நடந்த பேரணியின் போது அரங்கேறியுள்ளது. இதில் இரு பெண்களையும் வயல் வெளியில் வைத்து கூட்டு பலாத்காரம் செய்து துன்புறுத்தியுள்ளனர்.

இந்தியா முழுவதும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ள இச்சம்பவத்துக்கு உச்சநீதிமன்றம் உள்பட காங்கிரஸ், திமுக உள்ளிட்ட கட்சிகள் கண்டனத்தை பதிவு செய்துள்ளன. மணிப்பூர் கலவரம் குறித்து வாய் திறக்காத பிரதமர் மோடி முதன்முறையாக கண்டனத்தை பதிவு செய்துள்ளார். மணிப்பூரில் நடக்கும் கலவரங்கள் குறித்து வெளியே பரவாமல் தடுக்க ஒன்றிய பாஜ அரசு அம்மாநிலத்தில் இணைய சேவையை துண்டித்தது. இருந்தாலும் விளையாட்டு வீராங்கனை, ஓய்வு பெற்ற ராணுவ வீரர் ஆகியோர் இணையதளத்தில் வீடியோவை வெளியிட்டு மணிப்பூர் கலவரத்தை கட்டுப்படுத்த உதவ வேண்டும் என்று கதறி கெஞ்சினர்.

உண்மை நிலவரத்தை எப்போதும் மறைக்கமுடியாது என்பது போன்று தற்போது பழங்குடியின பெண்கள் மானபங்கம் செய்யப்பட்ட சம்பவம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. இந்த கொடுமைக்கு ஒன்றிய அரசு பொறுப்பேற்றே தீர வேண்டும்.

பாஜ ஆளும் மாநிலங்களில் உள்ள பிரச்னைகள் மற்றும் ஒன்றிய பாஜ அரசின் மக்கள் விரோத திட்டங்களை எதிர்க்கட்சிகள் கேள்வி கேட்கும் போதெல்லாம் அவர்களை அடக்குவதற்காகவும், மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்காகவும் அமலாக்கத் துறை, சிபிஐ, வருமானவரித்துறையை ஏவி பழிவாங்கும் நடவடிக்கையில் தான் ஒன்றிய அரசு கவனம் செலுத்திவருகிறது.

இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் தலைவரும் பாஜ எம்பியுமான பிரிட்ஜ் பூஷனுக்கு எதிராக மல்யுத்த வீராங்கனைகள் பாலியல் புகார் கூறி டெல்லியில் பல நாட்கள் போராட்டம் நடத்தியும் ஒன்றிய அரசு கண்டுகொள்ளவே இல்லை. அதே போன்று தற்போது மகாராஷ்டிர மாநில பாஜ துணை தலைவர் சோமையாவின் ஆபாச வீடியோ மராத்தி செய்தி சேனல்களில் வெளியாகி பரபரப்பாகியுள்ளது. இதில் பல அரசு பெண் அதிகாரிகளையும் அவர் மிரட்டி பலாத்காரம் செய்துள்ளது தெரியவந்துள்ளது. ஒன்றிய பாஜ அரசு முதலில் நாட்டின் கண்களாக போற்றப்படும் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்பதே சமூக ஆர்வலர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

இவ்வாறு ‘தினகரன்’ நாளேடு தலையங்கம் எழுதியுள்ளது.

# திருத்தணி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் ஆடிக்கிருத்திகை முன்னேற்பாடு பணிகள்!

## அமைச்சர்கள் ஆர்.காந்தி - பி.கே.சேகர்பாபு ஆய்வு!

சென்னை, ஜூலை 22-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி மற்றும் இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று (21.07.2023) திருத்தணி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ஆடிக் கிருத்திகையை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகளை ஆய்வு செய்தனர். அதனை தொடர்ந்து திருக்கோயில் சார்பில் கட்டப்படும் இளைப்பாறும் மண்டப கட்டுமான பணிகளை ஆய்வு செய்ததோடு, சிறப்பு மராமத்து பணி மேற்கொள்ளப்பட்டுள்ள தணிகை இல்ல குடில்கள் மற்றும் அன்னதானக் கூடத்தை திறந்து வைத்தனர்.

திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு ஆடிக்கிருத்திகை திருவிழா 07.08.2023 முதல் 11.08.2023 வரை நடைபெறவுள்ளது. இத்திரு விழாவிற்கு தமிழ்நாடு மட்டு மல்லாமல் இதர மாநிலங்களிலிருந்தும் லட்சக் கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்ய வருகை தருகின்றனர். அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள், போக்குவரத்து வசதிகள், பக்தர்கள் விரைவாக தரிசனம் செய்ய மேற்கொள்ள வேண்டிய பணிகள், கழிப்பிட வசதிகள், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, வாகன நிறுத்துமிடங்களில் ஏற்படுத்தப்பட வேண்டிய வசதிகள் குறித்து அமைச்சர் பெருமக்கள் ஆர்.காந்தி மற்றும் பி.கே.சேகர்பாபு ஆகியோர் விரிவான ஆய்வினை மேற்கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து, அமைச்சர் பெருமக்கள் ஆர். காந்தி மற்றும் பி.கே.சேகர்பாபு ஆகியோர் தலைமையில் திருக்கோயில் வளாகத்தில் ஆடிக்கிருத்திகை ஒருங்கிணைப்பு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட நிர்வாகம், காவல் துறை, நகராட்சி நிர்வாகம், சுகாதாரத்துறை, போக்குவரத்துத்துறை போன்ற துறைகள் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து அறிவுரைகள் வழங்கப்பட்டன.

முன்னதாக ஆர்.காந்தி மற்றும் பி.கே.சேகர்பாபு ஆகியோர் ரூ.49.50 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும் யானை நினைவு மண்டபம், ரூ.34.60 லட்சம் மதிப்பீட்டில் தணிகை இல்ல வளாகத்தில் புதிய குடில் கட்டுதல், ரூ.27.50 லட்சம் மதிப்பீட்டில் மலைக் கோயிலுக்கு செல்லும் வழியில் 3 நிழல் மண்டபங்கள் அமைத்தல் போன்ற பணிகளுக்கு அடிக்கல் நாட்டிதோடு, தணிகை இல்ல வளாகத்தில் ரூ.99 லட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டுள்ள குடில்களையும், விரிவுப்படுத்தப்பட்டுள்ள புதிய அன்னதானக் கூடத்தையும் திறந்து வைத்து, மலைக் கோயிலுக்கு வருகை தரும் மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் வசதிக்காக ரூ.5 லட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்துள்ள பேட்டரி கார்களை பக்தர்களின் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தனர்.

பின்னர், தெக்களூர் நீரேற்று நிலையத்தில் 500 மரக்கன்றுகளை நடும் பணியினை தொடங்கி வைத்த அமைச்சர் பெருமக்கள், திருப்பதிக்கு பாத யாத்திரையாக செல்லும் பக்தர்கள் தங்கி இளைப்பாறி செல்லும் வகையில் இத்திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு சோளீஸ்வர சுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான இடத்தில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் இளைப்பாறும் மண்டபம் அமைக்கப்படும் இடத்தினையும் ஆய்வு செய்தனர்.

இந்த நிகழ்வுகளின் போது இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் க.வீ.முரளீதரன், திருவள்ளூர் மாவட்ட ஆட்சி தலைவர் முனைவர் ஆல்பி ஜான் வர்கீஸ்., இந்து சமய அறநிலைத் துறை கூடுதல் ஆணையர் திருமதி ந.திருமகள், அறங்காவலர் குழு தலைவர் சு.ஸ்ரீதரன், வேலூர் மண்டல இணை ஆணையர் திருமதி க.ரமணி, திருத்தணி நகர் மன்ற தலைவர் திருமதி சரஸ்வதி பூபதி, திருக்கோயில் துணை ஆணையர் (பொறுப்பு) திருமதி விஜயா மற்றும் அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து

## தலைமைக் கழக அறிவிப்பு

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்கு பகுதி, முன்னாள் துணைச் செயலாளர் மு.சீத்தாபதி, தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து, மீண்டும் கழகப் பணியாற்ற அனுமதிக்குமாறு கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை 600 018.
நாள் : 21.7.2023.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க


# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
15-06-1943

மறைவு
21-07-2023

திருப்பூர் வடக்கு மாவட்ட தி.மு.கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர்

**க.செல்வராஜ்** MLA அவர்களின் மாமனாரும்,

**செ.சாந்தாமணி,**
அவர்களின் தந்தையுமான

**திரு.ராசப்பகவுண்டர் (எ) கருப்பசாமி கவுண்டர் அவர்கள்**

21-07-2023 வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இங்ஙனம் : குடும்பத்தினர் - உறவினர்கள்

**திருப்பூர் வடக்கு மாவட்ட தி.மு.க**